1987 மார்ச் 26]

திரு. என். எஸ். வி. சித்தன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முன்னாலே தான் வைப்பார்கள்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சில குடும்பங்களிலே பின்னாலே வைப்பது உண்டு. வேண்டுமென்றால் என்னிடம் நேராக வந்தால் உங்களுக்கு சொல்கிறேன். தண்ணீர் எப்படி வருகிறது என்பதுதான் பிரச்சினை. 8.1 லட்சம் லிட்டர் தண்ணீர் தந்து கொண்டிருக்கிறோம். அது மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி வழியாக வந்தாலும் தண்ணீர் தான். தரை மூலமாக வந்தாலும் தண்ணீர்தான். இந்த ஏழாம் மாதத்திலே உங்களுக்கு மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி கட்டி நானே வந்து திறந்து வைக்கிறேன்.

(இ) சைதாப்பேட்டை மருத்துவமனையில் போதிய பணியாளர்கள் இன்மை.

திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் துணை தலைவர் அவர்களே, "சைதாப்பேட்டை அரசு பொது மருத்துவ மனையில் எக்ஸ்ரே பிரிவு. இருதய பரிசோதனைப் பிரிவு துவங்க கருவிகள் மற்றும் கட்டிடங்கள் அமைக்கப்பட்டும் போதிய பணியாளர்கள் நியமனம் செய்யாத காரணத்தினால் அப்பகுதி வாழ் மக்களுக்கு ஏற்படும் அவல நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

14—2—1983ல் சென்னை குதிரைப் பந்தயச் சங்கத்தினால் வழங்கப்படும் நிதியைக் கொண்டு. சைதாப்பேட்டை அரசு மருத்துவமனையில் ஒரு எக்ஸ்ரே பிரிவு துவங்குவதற்குத் தேவையான கருவிகள் வழங்குவதற்கு அரசு அனுமதி அளித்தது. அவ்வாறே அச்சங்கத்தினால் வழங்கப்பட்ட நிதியைக்கொண்டு எக்ஸ்ரே பிரிவிற்கான தேவையான கருவிகள் வாங்கப்பட்டன. எனவே இம்மருத்துவமனையில் எக்ஸ்ரே பிரிவு, இருதயப் பரி

[திரு. ப. உ. சண்முகம்] [1987 மார்ச் 26

சோதனைப் பிரிவு மற்றும் பரிசோதனைப் பிரிவு ஆகியவைகள் செயல்படுவதற்குத் தேவையான கீழ்க்கண்ட பணியிடங்களை தோற்றுவித்து சமீபத்தில் அரசு ஆணை வெளியிடப் பட்டுள்ளது :—

1. கதிர் வீச்சாளர்—ஒன்று.
2. இருட்டறை உதவியாளர்—ஒன்று.
3. இ.சி.ஜி. நுட்பனர்—ஒன்று.
4. பரிசோதனைக்கூட நுட்பனர், தகுதி II—ஒன்று.
5. அலுவலக உதவியாளர்—ஒன்று.

எனவே சைதாப்பேட்டை அரசு மருத்துவமனையில் எக்ஸ்ரே பிரிவு, இருதய பரிசோதனைப் பிரிவு மற்றும் பரிசோதனைப் பிரிவு ஆகியவைகள் விரைவில் செயல்படத் தொடங்கும். எனவே இது குறித்து பொது மக்களிடையே எந்தவித அவல நிலையும் இருக்கத் தேவையில்லை.

திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் துணை தலைவர் அவர்களே, பணியாளர்கள் நியமிக்கப்பட்ட குறிப் பினைப் பார்த்தேன், நன்றி. அதிலே பரிசோதனை கூடத்திற்கு 3 பணியாளர்கள் தேவை என்று எழுதியிருக்கின்றார்கள். ஆனால் ஓரே ஒரு பணியாளர் நியமித்து இப்போது உத்தரவு வழங்கப்பட் டிருக்கின்றது. மேற்கொண்டு 2 பணியாளர்கள் நியமிப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா? இந்த மருத்துவ மனை, தென் சென்னை பகுதியிலே அதிகமான நோயாளிகள் வருகின்ற மருத்துவ மனை யாகும். எனவே இதை 100 படுக்கைகள் கொண்ட மருத்துவ மனையாக விரிவுபடுத்துகின்ற திட்டத்தினை பல முறைகள் அறிவித்தும் இன்னும் அந்தப் பணி தொடங்கப்படவில்லை. எனவே அங்கு 100 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக விரிவாக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சில கருவிகள் வாங்கப்பட்டு கட்டடம் கட்டப்பட்டு பணியாளர்கள் நியமிக்கப்படுவது பற்றி கேட்டிருந்தார்கள். அதற்கு பதில் சொல்லியிருக்கிறேன். அங்கு படுக்கைகள் அதிகப்படுத்துவது பற்றி கேட்டிருக்கின்றார்கள். அதற்குத்

1987 மார்ச் 26] [திரு. ப. உ. சண்முகம்]

தனிக் கேள்வி போடும்படி தெரிவித்துக்கொள்கிறேன். பரிசோதகர் 3 பேர்கள் நியமிப்பது பற்றி சொல்கின்றார்கள். தற்போது ஒருவர் போடப்பட்டிருக்கின்றார். அங்கே நடக்கின்ற வேலைகளைக் கருத்திற்கொண்டு வேண்டுமென்றால் நியமிக்கிறோம்.

(முற்பகல் 11-20)

(ஈ) கிருஷ்ணகிரி வட்டத்தில் யானைகளால் மக்களுக்கும் பயிர்களுக்கும் சேதம்.

திரு. க. இரா. சின்னராசு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "கிருஷ்ணகிரி வட்டம், ஆலப்பட்டி, மகராஜ கடை, கங்கலேரி போன்ற கிராம பகுதிகளில் காட்டு யானைகள் சுற்றிக்கொண்டு பொதுமக்களை துன்புறுத்தியும், நெல், வாழை போன்றவைகளை நாசமாக்குவதும் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சுற்றுலா, மது விலக்கு மற்றும் மின்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

அறிக்கை.

தமிழ்நாடு எல்லைக்கு அருகில் உள்ள கர்நாடக மாநில காடுகளில் இருந்து யானைக் கூட்டம் ஒன்று ஓசூர் கோட்டம், அன் செட்டி சரகம், கம்பம் பகுதியிலும் ஆந்திர மாநிலம் சித்தூர் கோட்டம், பலமநேர் மற்றும் வேலூர் கோட்டம், குடியாத்தம் காடுகளிலும் 1983 ஆம் ஆண்டு முதல் நடமாடுவதும், அக்கூட்டம் மக்களுக்குத் துன்பம் விளைவிப்பது மற்றும் பயிர்களைச் சேதமாக்குவது குறித்தும் தமிழ்நாடு வனத் துறைக்கு தகவல் இருந்து வருகிறது. வறட்சியின் காரணமாக, கர்நாடக மாநிலக் காடுகளிலிருந்து, யானைகள் தீவனம் மற்றும் தண்ணீர் தேடி கூட்டமாக வெளியே வருகின்றது. அவ்வாறு இந்த யானைக் கூட்டம் கடந்த ஆறு எழு மாதங்களாகவே, தர்மபுரி மாவட்டம் மற்றும் ஆந்திர மாநிலக் காடுகளில் உலவிக்கொண்டு வருகிறது. அவ்வப்போது காடுகளுக்கு அருகாமையில் வசிக்கும் மக்களுக்கும், விளைந்துள்ள பயிர்களுக்கும் இக்கூட்டம் சேதம் விளைவிக்கின்றது.